வாரியம் பயன்படுத்துகிறது. ஊராட்சிகள், விடுகட்டிக் கொடுக்கும் சங்கங்கள் போன்ற பொது நிறுவனங்களுக்கும் இதே நோக்கத்திற்காக இந்தச் சாம்பல் கொடுக்கப்படுகிறது. மின்சார வாரியம் கட்டும் கட்டிடங்களில் சிமிட்டிக்குப் பதிலாக இந்தச் சாம்பல் ஓரளவு பயன்படுத்தப்படுகிறது.

(உ) எண்ணூர் அனல் மின்சார நிலையத்திலிருந்து நாளொன்றுக்கு 1,200 முதல் 1,700 டன் சாம்பல் கிடைக்கும். இந்த அளவில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம் தாங்கள் நிறுவ எண்ணியுள்ள புழை கற்கலவைத் தொழிற்சாலையில் (Cellular concrete factory) பயன்படுத்துவதற்காக நாள் தோறும் கிட்டத்தட்ட 300 முதல் 400 டன் கொடுக்கும்படிக் கேட்டுக் கொண்டுள்ளது. எஞ்சியுள்ள சாம்பலில் ஒரு பகுதி தாழ்ந்த நிலப்பகுதிகளிலும் எஞ்சிய பகுதி கடலிலும் கொட்டப்படும்.

MR. CHAIRMAN : Questions are over.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member**]

II.—ANNOUNCEMENT *Re.* NOMINATION OF A MEMBER TO THE BUSINESS ADVISORY COMMITTEE

MR. CHAIRMAN : I have to announce to the House that under rule 166 (4) of the Tamil Nadu Legislative Council Rules, I have nominated the Hon. Thiru P. U. Shanmugam, Minister for Labour, as a Member of the Business Advisory Committee for the year 1968–69.

III.—PRESENTATION OF THE SECOND SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1968-69.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, 1968-69-ம் ஆண்டிற்கான இரண்டாம் துணை மதிப்பீடுகளை இம்மன்றத்தின் முன் வைக்க வேண்டி உங்கள் முன் வந்துள்ளேன். இத்துணை மானியக் கோரிக்கையின் மொத்தம் 25.18 கோடி ரூபாயாகும்; இதில் ஏறக்குறைய 6.08 கோடி ரூபாய் வருவாய்க் கணக்கின்பாற்படும்; எஞ்சிய சுமார் 19.10 கோடி ரூபாய் மூலதன, கடன் கணக்குகளின்பாற்படும். கடந்த ஆகஸ்ட் திங்களில் முதல் தொகுதித் துணை மதிப்பீடுகளை மன்றத்தின் முன் வைத்த பின்னர், அரசு ஒப்பளிப்பு வழங்கிய பெரும்பாலான "புதுப் பணித்" திட்டங்கள் இத்துணை மதிப்பீடுகளில் அடங்கும். சில மானியக் கோரிக்கைகளின்கீழ் தற்போதுள்ள நிதி ஒதுக்கத்திற்கு மேல் இப்போது அதிகமாய்ச் செலவாகக் கூடுமென எதிர்பார்க்கப்படுவதால், அந்த மானியங்களுக்குக் கூடுதல் நிதி ஒதுக்கம் கேட்டிடவும் இந்த வாய்ப்பினைப் பயன்படுத்திக் கொண்டுள்ளோம்.

இத்துணை மதிப்பீடுகளில் மிகப் பெரியதொரு நிதி ஒதுக்கம் மாநில மின்சார வாரியத்திற்குக் கடன் உதவியளிப்பதற்காக